## அக்டோபர் – 24 – செவ்வாய்

புனித அந்தனி மரிய கிளறற்

### எனவே, இதோ வருகின்றேன்:” திபா. 40:7

### முதல் வாசகம் : உரோமையர் 5:12, 15,17–19,20-21

சகோதர சகோதரிகளே! ஒரே ஒரு மனிதன் வழியாய்ப் பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது் அந்தப் பாவத்தின் வழியாய்ச் சாவு வந்தது. அதுபோலவே, எல்லா மனிதரும் பாவம் செய்ததால், எல்லா மனிதரையும் சாவு கவ்விக்கொண்டது.ஆனால், குற்றத்தின் தன்மை வேறு, அருள்கொடையின் தன்மை வேறு. எவ்வாறெனில், ஒருவர் செய்த குற்றத்தால் பவரும் இறந்தனர். ஆனால் கடவுளின் அருளும் இயேசு கிறிஸ்து என்னும் ஒரே மனிதரின் வழியாய் வரும் அருள்கொடையும் பலருக்கும் மிகுதியாய்க் கிடைத்தது. மேலும் ஒருவர் குற்றத்தாலே, அந்த ஒருவர் வழியாகச் சாவு ஆட்சி செலுத்தினதென்றால் அருள்பெருக்கையும் கடவுளுக்கு ஏற்புடையவராகும் கொடையையும் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவர் வழியாக அடைந்து கொண்டவர்கள் வாழ்வுபெற்று ஆட்சி செலுத்துவார்கள் என இன்னும் மிக உறுதியாய் நம்பலாம் அன்றோ? ஆகவே ஒருவரின் குற்றம் எல்லா மனிதருக்கும் தண்டனைத் தீர்ப்பாய் அமைந்ததுபோல், ஒரே ஒருவரின் ஏற்புடைய செயல் எல்லா மனிதருக்கும் வாழ்வளிக்கும் விடுதலைத் தீர்ப்பாய் அமைந்தது. ஒரு மனிதரின் கீழ்ப்படியாமையால் பலர் பாவிகளானது போல், ஒருவரின் கீழ்ப்படிதலால் பலர் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆவார்கள். குற்றம் செய்ய வாய்ப்புப் பெருகும்படி சட்டம் இடையில் நுழைந்தது் ஆனால் பாவம் பெருகிய இடத்தில் அருள் பொங்கி வழிந்தது.இவ்வாறு, சாவின் வழியாய்ப் பாவம் ஆட்சி செலுத்தியதுபோல், நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் அருள் ஆட்சி செய்கிறது் அந்த அருள்தான் மனிதர்களைக் கடவுளுக்கு ஏற்புடையவர்களாக்கி, நிலைவாழ்வு பெற வழிவகுக்கிறது.

**பதில்பாடல் :** என் கடவுளே உம் திருவுளம் நிறைவேற்ற
இதோ வருகிறேன்

### நற்செய்தி : லூக்கா 12 : 35 – 38

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களைன நோக்கிக் கூறியதாவது: ”உங்கள் இடையை வரிந்துகட்டிக் கொள்ளுங்கள். விளக்குகளும் எரிந்து கொண்டிருக்கட்டும்.திருமண விருந்துக்குப் போயிருந்த தம் தலைவர் திரும்பி வந்து தட்டும்போது உடனே அவருக்குக் கதவைத் திறக்கக் காத்திருக்கும் பணியாளருக்கு ஒப்பாய் இருங்கள்.தலைவர் வந்து பார்க்கும்போது விழித்திருக்கும் பணியாளர்கள் பேறு பெற்றவர்கள். அவர் தம் இடையை வரிந்து கட்டிக்கொண்டு அவர்களைப் பந்தியில் அமரச் செய்து, அவர்களிடம் வந்து பணிவிடை செய்வார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.தலைவர் இரவின் இரண்டாம் காவல் வேளையில் வந்தாலும் மூன்றாம் காவல் வேளையில் வந்தாலும் அவர்கள் விழிப்பாயிருப்பதைக் காண்பாரானால் அவர்கள் பேறுபெற்றவர்கள்“ என்றார்.

**தியானம்:** கடவுள் நமக்கு கொடுக்கும் வாய்ப்பினை சரியாகப்பயன்படுத்தாமல் இருக்கின்றோம். அதன் வேதனை என்னவென்றால் ஒருமுறை கிடைக்கும் வாய்ப்பு மறுமுறை கிடைக்காது. ஆகையால் நாம் கடவுள் நமக்கு கொடுக்கும் வாய்ப்புக் களை சரியாக பயன்படுத்த கற்றுக்கொள்வோம். தி.வெ.நூ 3-20 இல் வாசிக்கிறோம் நான் கதவு அருகில் நின்று தட்டிக் கொண்டிருக்கிறேன். யாராவது எனது குரலைக் கேட்டு கதவைத்திறந்தால் நான் உள்ளே சென்று அவர்களோடு உணவருந்துவேன். அவர்களும் என்னோடு உணவருந்துவார்கள் என்று. ஆம் கடவுள் நம்மைத் தேடி வருகின்ற போது அவர் கொடுக்கும் வாய்ப்புக்களை விழிப்பாக இருந்து பயன் படுத்தும்போது நம்முடைய வாழ்வில் நாம் எல்லா நன்மைகளைப் பெறுவது உறுதி. அதை விடுத்து அவர் கொடுத்த வாய்க்களை தவற விட்டோம் என்றால் அதனால் நாம் தான் மிகப்பெரிய இழப்புக்களை சந்திப்போம். எனவே இயேசுவின் வழியில் நடக்கும் நாம் கடவுள் நம்மைத் தேடிஒவ்வொருநாளும் வருவதை விழிப்பாய் இருந்து உணர்ந்து கொண்டு அவர் தரும் வாயப்புக்களை சிறப்பாகப் பயன்படுத்த கற்றுக்கொள்வோம். அதன் வழியாக இறைவன் அளிக்கும் முடிவில்லா வாழ்வைப் பெற்றுக்கொள்வோம்.